# “கவிச் சிகரம் கண்ணதாசன்”

முனைவர் து.வெள்ளைச்சாமி,

*துணைமுதல்வர் மற்றும் தமிழ்த்துறைத் தலைவர்,*
*கே.ஆர்.பி.கலை மற்றும் அறிவியல் கல்லூரி,*
*காக்கிவாடன்பட்டி, சிவகாசி மேற்கு.*

**முன்னுரை**

“கண்ணதாசன்” இந்தப் பெயரை அறியாத மதிழ் நெஞ்சம் இல்லை என்று சொல்லுமளவிற்கு இமயப்புகழ் பெற்ற இனியக் கவிஞர், கவிஞர்கள் காலத்தால் அழிவதில்லை. நான் நிரந்தரமானவன் அழிவதில்லை; எந்த நிலையிலும் எனக்கு மரணமில்லை என்று அறைகூவல் விடுத்த பெருங்கவிஞர் கண்ணதாசன். தன்னுடைய படைப்பாற்றலால் 20ஆம் நூற்றாண்டின் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு இணையற்ற பங்களிப்பினை எளிமையான இசைப்பாடல்களின் வாயிலாகப் படைத்தளித்த காவியத்தாயின் இளையமகன்; காதல் பெண்களின் பெருந்தலைவன் பாமர ஜாதியில் தனிமனிதனாக விளங்கியவர். அப்படிப்பட்ட கவிச் சிகரத்தின் பன்முகத்தன்மை குறித்து ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**பிறப்பு – வளர்ப்பு**

வீரம் செறிந்த சிவங்கை மாவட்டம் - திருப்பத்தூருக்கருகில் அமைந்துள்ள சிறுகூடல்பட்டியில் சாத்தப்ப செட்டியாருக்கும் விசாலாட்சி அம்மையாருக்கும் எட்டாவது மகனாகப் பிறந்தவர். தமிழையும் தமிழ் மண்ணையும் கவித்திறந்தால் காப்பதற்கு 24-06-1927 இல் இக்கவிதை மொட்டு மலர்ந்தது. இவரது இயற்பெயர் முத்தையா. பின்னாயில் இவர் கண்ணதாசன் என்ற பெயரில் அழைக்கப்பட்டார். குருகுலத்தில் எட்டாம் வகுப்புவரை படித்தார். கா.அப்பாத்துரையார் மற்றும் வித்துவான் முத்துகிருஷ்ணன் ஆகியோரிடம் தமிழ்க்கற்று தமிழ் இலக்கியங்களின் மீது ஈடுபாடும், ஆழ்ந்த புலமையும் பெறலானார். திருவொற்றியூர் அஜாக்ஸ் நிறுவனத்தில் எழுத்தராகப் பணிபுரிந்த கவிஞர், இதழ்களிலும் திரைப்பாடல்கள் எழுதுவதிலும் முயற்சிகள் மேற்கொண்டார். அதன் விளைவே கவிதை உலகில் கொடிகட்டிப் பறக்கலானார்.

**குடும்பம்**

கவிஞர் அவர்களுக்கு மூன்று மனைவியர். முக்கனிகளின் சாரெடுத்து 9 ஆண்மக்களையும் 6 பெண் மக்களையும் பெற்று வளமான வாழ்வு வாழ்ந்தவர். இவருக்கு இல்லறத்தில் நல்லறங்காண துணை நின்ற முப்பெரும் தேவியர் பொன்னம்மை, பார்வதி அம்மையார் மற்றும் வள்ளியம்மை. 1949 ஆம் ஆண்டு ‘கள்வனின் காதலி’ என்ற திரைப்படத்தில் “கலங்காதிரு மனமே உன் கனவெல்லாம் நிறைவேறும் ஒரு தினமே” என்ற திரைப்பாடல் முதல்பாடலாக, கதைப்பாடலாக தமிழ்த்திரை உலகிற்கு கவிஞரை அறிமுகப்படுத்திய பாடலாக அமைந்தது.

**பைந்தமிழ் கவிஞர்**

கண்ணனின் தாசனாக கண்ணனுக்கு தாசனாக வாழ்ந்து காட்டியவர் கண்ணதாசன். அவர் திரைப்படப்பாடலாசிரியராக, கவிஞராக, வசனகர்த்தாவாக, காப்பியப் புலவராக, நடிகராக, தயாரிப்பாளராக, இதழாசிரியராக, கட்டுரையாளராக, ஆன்மிகவாதியாக, அரசியல் வாதியாக இப்படியாக எத்தனை முகங்கள். பாரதிக்கு நிகரான பைந்தமிழ்க் கவிஞர்.

**காதல்**

காதல் என்பது இனம். மொழி, நாடு என்ற எல்லைக்குள் அடங்குவதில்லை. காதல் மொழி, உலகத்திற்கே பொதுவானது என்பதை, ''உலகமெங்கும் ஒரே மொழி உள்ளம் பேசும் காதல் மொழி'' என்ற பாடலின் மூலம் கண்ணதாசன் உணர்த்துகிறார்.

''மலரினும் மெல்லியது காமம் சிலரதன்

செவ்வி தலைப்படுவார்'' (குறள்: )

என்று வள்ளுவர் கூறுகிறார். இரு மனங்களின் மென்மையான உணர்வே காதல் என்பதை கண்ணதாசனின் திரை இசைப்பாடல்கள் உணர்த்துகின்றன. ''காதல் என்பது முதன் கூடு அதைக் கட்டுவதென்றால் பெரும்பாடு'' என்கிறார் கவிஞர்.

காதலின் தொடக்கம் கண்கள் மூலமே நிகழ்கின்றது. காதல் கண்கள் என்ற வாசல் வழியே நுழைந்து, கருத்தினில் கலந்து இரண்டு நெஞ்சங்களை இணைக்கின்றது. இராமன் மதிலையின் கன்னி மாடத்தில் நின்ற சீதையைக் கண்டான். அவரும் அவனைக் கண்டான். இதையே கவிச்சக்கரவர்த்தி கம்பர், ''அண்ணலும் நோக்கினான் அவரும் நோக்கினாள்'' என்று கண்களின் சந்திப்பால் காதல் மலர்ந்ததாகக் கூறுகின்றார். இதையே கண்ணதாசன்,

''கண்கள் எங்கே, நெஞ்சமும் அங்கே''

என்ற பாடலின் மூலம் விளக்கியுள்ளார்.

கண்கள் கலந்துவிட்டால் வாய்ச்சொற்களினால் பயனொன்றும் இல்லை என்பதை வள்ளுவர்,

'கண்ணொடு கண் இணை நொக்கொக்கின் வாய்ச்சொற்கள்

என்ன பயனும் இல'' (குறள்: )

என்ற குறட்பாவால் விளக்கியுள்ளார். இதையே கண்ணதாசன் பார்வைகள் பரிமாறிக் கொள்ளும் போது, பல்லாயிரம் சொல் தேவை இல்லை என்கிறார். இதனை,

''பார்வை ஒன்றே போதுமே

பல்லாயிரம் சொல் வெண்டுமோ''

என்ற பாடல் அடிகள் உணர்த்துகின்றன.

கண்கள் காணுகின்ற தன்மை பெற்றிருந்தும் காதலைக் காணாவிட்டால் அவை கண்கள் அல்ல, அவனை எண்ணிப்பார்க்காத நெஞ்சமும் நெஞ்சமல்ல, காதலன் சொல்லும் சொல்லே சொல். மற்றவை சொல்லல்ல. மொத்தத்தில் நீ இல்லாவிட்டால் நானும் நானாக இருக்கமாட்டேன் என்று ஒரு பெண் பாடுகிறார். இதனை,

''உன்னைக் காணாத கண்ணும் கண்ணல்ல

உன்னை எண்ணாத நெஞ்சம் நெஞ்சல்ல

நீ சொல்லாத சொல்லும் சொல்லல்ல

நீ இல்லாமல் நானும் நானல்ல''

என்ற பாடல் அடிகள் புலப்படுத்துகின்றன.

காலன் ஒருவன் தன் காதலியிடம் உன் கையில் உள்ளதைக் கொடு என்கிறார். அவரோ கண்ணில் உள்ளதைக் கொடுத்து விடுகிறார். இதனை,

''காட்டினில் ஒருவன் எனைக் கண்டான்

கையில் உள்ளதைக் கொடு என்றான்

கையில் எதுவும் இல்லையென்று

கண்ணில் உள்ளதைக் கொடுத்துவிட்டேன்''

என்ற பாடல் அடிகள் விளங்குகின்றன.

காதல் வசப்பட்டால் எதைப்பற்றியும் சிந்திக்காமல் தன்னையே தந்து விடும் நிலை ஏற்படுகிறது என்பதைக் கவிஞர்,

''சந்தித்த வேளையில்

சிந்திக்கவே இல்லை

தந்துவிட்டேன் என்னை''

என்ற பாடல் அடிகளில் விளக்குகிறார்.

இரண்டு மனங்கள் ஒன்றுவிட்டால் எண்ணங்களும் ஒன்றாகவே இருக்கும் என்பதை கவிஞர்,

''நான்பேச நினைப்பதெல்லாம் நீ பேச வேண்டும்

நாளொடும் பொழுதோடும் உறவாட வேண்டும்

நான்காணும் உலகங்கள் நீ காண வேண்டும்

நீ காணும் பொருள்யாவும் நானாக வேண்டும்''

சாதாரண மானிடர்களின் காதலைவிட ஆழமான அன்புடைய தங்கள் காதலுக்கு என்றும் அழிவில்லை என்கிறார் கவிஞர், இதனை,

இந்த மானிடக் காதலெல்லாம்

ஒரு மரணத்தில் மாறிவிடும்

அந்த மலர்களின் வாசமெல்லாம்

ஒரு மாலைக்குள் வாடிவிடும்

நம் காதலின் தீபம் மட்டும்

எந்த நாளினும் கூட வரும்''

என்ற பாடல் அடிகள் புலப்படுத்துகின்றன.

எத்தனை பிறப்பெடுத்தாலும் அத்தனைப் பிறப்பிலும் தன் உள்ளத்தைக் கொள்ளை கொண்டவளே தனக்கு மனைவியாக வரவேண்டுமென தலைவன் ஆசைப்படுவதாக கவிஞர் கூறுகிறார் இதனை,

“இங்கே என்காலமெல்லாம் கடந்துவிட்டாலும் ஓர்

இரவிஇலே முதுமையை நான் அடைந்து விட்டாலும்

மங்கை உன்னைத் தொட்டவுடன் மறந்துவிட்டாலும் - நான்

மறுபடியும் பிறந்து வந்து மாலை சூடுவேன்”

என்ற பாடல் எடுத்துரைக்கின்றது. இதன் முன்னுரையாக “இம்மையாகினும் மறுமையாகினும்” என்ற சங்கப்பாடல் அமைந்திருப்பதைக் காணமுடிகின்றது.

**தேசிய ஒருமைப்பாடு**

“எஞ்சாமன் நசை வேந்தனை வேந்தன்

அஞ்சுதகத் தலைச் சென்று அடல் குறித்தன்றே”

என்ற தொல்காப்பிய நூற்பாவின் மரபுப்படி சீனர்கள் தம் நாட்டு எல்லைப் பகுதி இந்தியாவில் உள்ளது என்ற மண்ணாசை காரணமாக இந்தியாவின் மீது போரிட்டனர். அந்தக் காலகட்டத்தில் கவிஞர் கண்ணதாசன் இக்கவிதையைப் பாடினார்.

அவர் நம் நாட்டின் மீது கொண்ட பற்றுதலால் தன்னை எதிர்த்து போகிட வந்த பகை மன்னை அழிக்க வஞ்சினம் கூறும் பாடலாக அமைந்துள்ளதை,

“எதிர்வரும் பகையை ஏறிட்டு நோக்கி

கொதி நெருப் பற்றிக் கொட்டாதிருந்தால்

வழிகளிரண்டும் வீழ்க நிலத்தே”

என்ற அடிகள் புலப்படுத்துகின்றன. இதனை புறநானூறு 72 ஆம் பாடல் முன்மொழிந்து நிற்கிறது. (சிறுசொற் சொல்லிய….)

“கங்கை நடுப்புரத்துக் கோதுமைப் பண்டம்

காவிரி வெற்றிலைக்கு மாறுகொள்வோம்

சிங்க மராட்டியர் தம் கவிதை கொண்டு

சேர்த்துத் தத்துவங்கள் பரிசளிப்போம்”

என்ற மகாகவியின் கவிதை அடிகளைப் பின்பற்றி கவியரசும் தேசிய ஒருமைப்பாடு பற்றி கவிதைகள் வடித்துள்ளார். இதனை,

“கங்கை நதியைத் திருப்பியிழுத்துக்

காவிரிவரைக் கொணர்வோம் முகவைக்

காடுவரைக் கொணர்வோம் சேதுக்

கால்வாய் தனிப் விடுவோம்”

என்ற பாடல் அடிகள் சுட்டுகின்றன.

மனிதகுல ஒருமைப்பாட்டின் மூலம் இறை ஒருமைப்பாடு. இறைஒருமைப்பாட்டின் மூலம் மனித குல ஒருமைப்பாடு என்ற உறுதியான கொள்கை கொண்ட கவிஞர்.

“இந்திய எல்லை இறைவனின் எல்லை

இறைவனின் பூமியெங்கும் இந்தியர் எல்லை

இமையம் குமரி மட்டும் எல்லைகள் இல்லை சிந்த

இன்ப வையம் முழுதும் எங்களின் எல்லை”

எனப்பாடுகிறார்.

**தத்துவம்**

தத்துவம் என்பதற்குக் கவிஞர் அவருக்கு உரிய தனித்தன்மையில் தத்துவம் என்பது இருட்டறையில் கருப்புப் பூனையைக் குருடன் ஒருவன் தேடுவது போன்றதாகும். புரிந்தும் புரியாததாகவும், அறிந்தும் அறியாததாகவும் மனதில் ஏற்படும் எண்ணமே தத்துவம் ஆகும் என்பார். நல்ல மனிதர்களைத் தெய்வம் என்று போற்றுவார் கவிஞர். இதனை,

"நன்றி நிறைந்தவன் எங்கே தெய்வம் அங்கே

நன்மை புரிந்தவன் எங்கே தெய்வம் அங்கே

பாசம் நிறைந்தவன் எங்கே தெய்வம் அங்கே"

என்று மனிதனுக்குள் தெய்வம் இருப்பதைக் புரிய வைப்பதில் வெற்றி பெற்றுள்ளார் கவிஞர்.

மரணத்தின் பின்பு உறவுகளின் நிலையென்ன என்று ஒரு கேள்வி கேட்டு அதற்கு விடையும் சொல்கிறார் கவிஞர். இதனை,

"வீடுவரை உறவு; வீதிவரை மனைவி

காடுவரை பிள்ளை; கடைசி வரை யாரோ"

என்ற பாடல் அடிகள் புலப்படுத்துகின்றன.

**வாழ்வியல் நெறிகள்**

கண்ணதாசன் எழுதிய 'இயேசுகாவியம்' மனித உயர்வுக்கு வழிவகுக்கும் சீரிய நெறிகளை வெளிப்படுத்துகின்றது. இயேசு பெருமானின் வாழ்க்கை நிகழ்வுகளை எடுத்துரைக்கின்றது.

ஒருவன் தன் வாழ்நாளில் மனதில் குற்றம் இல்லாமல் வாழ்வதையே அறம் என்கிறோம். அறமே வாழ்வில் நமக்கு நிலைத்த இன்பத்தைத் தரும். தவறு இல்லாத வாழ்க்கை வாழ்வதே அறம். இவ் அறத்தைக் கடைப்பிடித்தால் தீமைகள் நம்மைவிட்டு விலகிப் போகும் என்பதை,

"அறம்புரிந் தல்லவை நீக்கல் இனிதே"

என்று இனியவை நாற்பது (பா.21) சுட்டுகிறது.

அறத்தோடு கூடிய வாழ்வை மேற்கொண்ட மனிதன் தன் உள்ளத்தில் நேர்மை, நிறைவு ஆகியவை கொண்டு வாழ்வை முறையாய் வாழ முடியும் என்பதை,

"நீதியின் பாலே தாகங்கொண் டோரே

பேறுபெற் றேரென்றார் - அவர்

நிறைவே பெற்று முறையாய் வாழ்பவர்

அறமே தலையென்றார்" (மலைப்பொழிவு, ப.95)

என்ற அடிகள் உணர்த்துகின்றன. அறத்தினால் மனிதன் பெறக்கூடிய நன்மைகளைக் குறிப்பிடுகின்றது இயேசுகாவியம்.

**முடிவுரை**

தமிழ்ப் புலவர்களுக்கும் தமிழ் அறிஞர்களுக்கும் தமிழ்த்துறை ஆசிரியர்களுக்கும் முன்னோடியாக விளங்கி நிற்பவர் கண்ணதாசன் அத்தகைய கவியரசரின் பன்முகத்தன்மை குறித்து இக்கட்டுரையின் வழி அறிந்து கொண்டோம்.

**துணைநூற்பட்டியல்**

[1] **திருக்குறள் - சிற்பி பாலசுப்பிரமணியம்** (2.ஆ)

[2] புறநானூறு – கு.வெ.பாலசுப்பிரமணியம் புறநானூறு (2.ஆ)

[3] **இயேசுகாவியம் – கண்ணதாசன் - மழைபொழிவு பகுதி பக்**-95

[4] **இனியவைநாற்பது - எளிய உரை - நா.மாணிக்கவாசகன்**

[5] **கண்ணதாசன் பாடல்கள் - காந்தி கண்ணதாசன் - மக்கள் பதிப்பகம்**